16 டிசம்பர் 2018

Newbec

NEW WAY OF BEING CHURCH

திருவருகை காலம் 3ம் ஞாயிறு

எதிர்நோக்கம் கொண்ட சீடர்களாகுவோம்

மாதாந்திர கருப்பொருள்:

**கிறிஸ்துவே இன்றியமையாதப் பரிசு (கொடை)**

# மகிழ்ந்து பேருவகை கொள்ளுங்கள்

இன்றைய வாசகங்கள் மகிழ்ச்சியால் நிறைந்துள்ளன. **‘ஆண்டவரோடு இணைந்து என்றும் மகிழுங்கள்’** என்பது வரவேற்புப் பாடல். பிலிப்பி நகர மக்ககளை இதே வார்த்தைகளைக் கொண்டு பவுல் வரவேற்கிறார். ‘ஆண்டவர் உன்பொருட்டு அவர் மகிழ்ந்து களிகூருவார்; தம் அன்பினால் உனக்குப் புத்துயிர் அளிப்பார்; உன்னைக் குறித்து மகிழ்ந்து ஆடிப்பாடுவார்’ என இறைவாக்கினர் செப்பனியா பறைசாற்றுகிறார்.



Image: ©123rf.com

மகிழ்ந்து பேருவகை கொள்ளுங்கள்! இன்றைய திருப்பலியில் வண்ணங்களில் மாற்றம். மெழுகுதிரி மற்றும் குரு ஆடைகள் ஊதாவிலிருந்து வெளுப்பு சிகப்பு மாறுகின்றது. ஏனெனில், ‘இக்காலத்தில் நாம் படும் துன்பங்கள் எதிர்காலத்தில்ல நமக்காக வெளிப்படப் போகிற மாட்சியோடு ஒப்பிடத் தகுதியற்றவை’ (உரோ.8:18). விழிப்பு நிலையைக் கடந்து எதிர்பார்ப்பு நிலைக்கு நாம் மாறுகிறோம். கடந்த வார நற்செய்தியில் திருமுழுக்கு யோவான் பாலைநிலத்தில் இருந்து வெளியேறி, ஆண்டவர் வழியை ஆயத்தப்படுத்துங்கள் என முழங்கினார். இவ்வார நற்செய்தியில், மெசியாவின் வருகையை யோவான் பிரகடனப்படுத்துகிறார்.

வாசகங்களால் எழுச்சியைப் பெறலாம், ஆனால் இறையருளின் பாதுகாவலரான நாம் இந்த திருவருகை காலத்தில் சற்று கூடுதல் முயற்சியை மேற்கொள்வோம்.

திருவருகையில் நற்செய்தியைப் பகிர்வோம். மீட்பர் பிறந்து, இறந்து, மீண்டும் உயிர்க்கப் போகிறார். நம்மோடு வந்த கிறிஸ்து, மீண்டும் மாட்சியோடு வருவார். இவரைப் பற்றி அறியாத குறைந்தது ஒருவருக்குத் தெரிவிப்போமா?

சுயநலத்திற்கு மரித்து, கடவுளின் அருளால் உறவுமுறை நிலைநிறுத்தப்பட்டு, மன்னிப்பும் குணமளிப்பும் கொண்டு வரட்டும். பாவமன்னிப்புத் தொட்டியை அணுகி விட்டோமா?

விழிப்புநிலை. திருவருகை காலம் என்பது விழிப்பாக காத்திருப்பது, அன்பினால் காத்திருப்பது. திருவருகை காலத்தில் ஏற்றும் 4 மெழுகுதிரியின் அர்த்தத்தை உணர்ந்து, எதிர்பார்ப்பு, மகிழ்ச்சி, அமைதி, அன்பின் தூதராக இருப்போமா?

கடவுளின் அருளை நம்மையும் தாண்டி பிறருக்கு வழங்குவோம். நமது அகிசவில் இருக்கும் நோயாளிகள் மற்றும் முதியோரை நலம் விசாரித்து கடவுளின் அருளையும் அன்பையும் பகிர்ந்து கொள்பவராக இருப்போமா?

‘ அவரது வருகையால், கிறிஸ்து அனைத்தையும் புதியதாக்கினார்’ என்ற புனித இரானியஸ் கூற்றைப் போல் எல்லாம் புதிதாக்குவோம். ஒவ்வொரு நாளையும் புதிதாக்க நற்கருணையை நமது அன்பின் பிறப்பிடமாக்குவோமா?

நம்பிக்கையின் கொடைக்கு கடவுளுக்கு நன்றி கூறுவோம். நம்பிக்கை இல்லையென்றால், நம்மிடம் ஒன்றுமில்லை என அறிவோமா?

‘ஆர்ப்பரித்து அக்களியுங்கள்; இஸ்ரயேலின் தூயவர் உங்களிடையே சிறந்து விளங்குகின்றார்’ தியானப்பாடலை உளமாறப் பாடி, திருவருகை காலத்தின் மூன்றாவது மெழுகுதிரியை ஏற்றுவோம்.✝

நீயின்றி என்னால் வாழ முடியாது என எண்ணுகிறேன்; வாரும் ஓ இயேசுவே வாரும், உம்மை வேண்டுகிறேன்

– புனித லியனட்

**வாரம் ஒரு வசனம்**

‘ஆண்டவரோடு இணைந்து என்றும் மகிழுங்கள்’

INTERNAL CIRCULATION ONLY
BUL 50/2018

*Published by:* Peninsular Malaysia Pastoral Team
api@archkl.org

*Print:* Stenoprint Sdn Bhd
*Design:* The Mustard Seed Studio

## மினவுதல் மாதா தேவாலயம்

85 A, ஜலான் யாம் துவான், 70000 சிறம்பான்
தொ.பே. 06-762 4468 /763 4934/767 7542
தொ.நகல்: 06-767 7544
Email: serembanvisitaion@gmail.com
Website: www.visitationseremban.org
பங்கு குருவானவர்: மறைதிரு. ஜோர்ஜ் ஹரிசன்
உதவி பங்கு குருவானவர்: மறைதிரு. சேவியர் அண்ட்ரூ

*2018 ஆம் ஆண்டின் கருப்பொருள்*
***எதிர் நோக்கு கொண்ட சீடர்களாகுவோம்.***
*2018 டிசம்பர் (மார்கழி) மாதத்தின் கருப்பொருள்:*
***கிறிஸ்துவே இன்றியமையாத பரிசு (கொடை)***
**மினவுதல் தேவாலயத்தின் 170 ஆம் ஆண்டை நோக்கிய பயணம்**
**(1848 - 2018)**

**<u>பங்கு அலுவலக நேரம்</u>**
திங்கள் - வெள்ளி: காலை 8.30 - மாலை 5.30
சனி: காலை 8.30 - மாலை 7.30
ஞாயிறு: காலை 8.30 - பகல் 3.00
(ஒவ்வொரு சனி, ஞாயிறு திருப்பலி நடைபெறுவதற்கு 30 நிமிடத்திற்கு முன் ஒப்புரவு அருளடையாளம் வழங்கப்படும். குருவானவருக்கு நேரம் இருந்தால்)



**இவ்வாரத்தின் நிகழ்ச்சி நிரல்: திருவருகைக்காலம் 3ஆம் ஞயிறு** — **சனி 15-12-2018 - ஞாயிறு 23-12-2018**
செப் : 3: 14 - 17   தி.பா: 12: 2-3, 4bcd, 5-6   பிலி: 4: 4 - 7   லூக்கா: 3: 10-18
**"ஆர்ப்பரித்து அக்களியுங்கள், ஆண்டவர் சிறந்து விளங்குகிறார்" - திபா 12**

| | | | | |
|---|---|---|---|---|
| சனி | 15 | 5.00 மா<br>5.30 மா<br>5.45 மா<br>6.00 மா | செபமாலை / நவநாள்/<br>நற்கருணை ஆசீர்வாதம்/ திருப்பலி<br>(புனித புரூணோ 2) | |
| ஞாயிறு | 16 | 7.00 கா<br>9.00 கா<br>11.00 கா<br><br>01.00 பக | திருப்பலி (த) (மார்ஜெரி தி.இ.ஆ.சிற்றாலயம்)<br>திருப்பலி (ஆ) (புனித புரூணோ 3)<br>திருப்பலி (சீனமொழி)<br>மாலை 4.30 மணி தித்தி (சீ)<br>திருப்பலி (தேமொழி) | **மறைக்கல்வி வகுப்புகள் நடைபெறாது (பள்ளி விடுமுறை) 2019 ஆம் ஆண்டிற்கான பதிவுகள் ஜனவரி (தை) 6 ஆம் திகதி நடைபெறும்**<br>**முதியோர் கிறிஸ்துவ புகுமுக வகுப்பு** ( முகிபுவ )<br>காலை 9.00 - 10.30 ( தமிழ் ) காலை 11.00 - 12.30 ( தே. மொ )<br>காலை 11.00 - 12.30 ( ஆங்கிலம் ) காலை 8.45 - 10.15 (சீனம்) |
| திங்கள் | 17 | 6.45 கா | திருப்பலி | *தூய ஆவி அருங்கொடை செபம் (ஆ) மாலை 7.30 மினவுதல் தேவாலய மண்டபம்* |
| செவ் | 18 | 6.45 கா | திருப்பலி | *தூய ஆவி அருங்கொடை செபம் (சீ) மாலை 7.30 மினவுதல் தேவாலய மண்டபம்* |
| புதன் | 19 | 6.45 கா | திருப்பலி | |
| வியா | 20 | 6.45 கா | திருப்பலி | *தூய ஆவி அருங்கொடை செபம் (த) மாலை 7.30 மினவுதல் தேவாலய மண்டபம்* |
| வெள் | 21 | 6.45 கா | திருப்பலி | |

**திருவருகைக்காலம் 4ஆம் ஞயிறு**
மீக் : 5: 1-4a   தி.பா: 79: 2ac, 3bc, 4bcd, 15-16, 18-19   எபிரே: 10: 5 - 10   லூக்கா: 1: 39-45
**"கடவுளே, எங்களை மீட்குமாறு உமது முக ஒளியைக் காட்டியருளும்" - திபா 79**

| | | | | |
|---|---|---|---|---|
| சனி | 22 | 5.00 மா<br>5.30 மா<br>5.45 மா<br>6.00 மா | செபமாலை / நவநாள்/<br>நற்கருணை ஆசீர்வாதம்/ திருப்பலி<br>(புனித புரூணோ 2) | |
| ஞாயிறு | 23 | 7.00 கா<br>9.00 கா<br>11.00 கா<br><br>01.00 பக | திருப்பலி (த) (மார்ஜெரி தி.இ.ஆ.சிற்றாலயம்)<br>திருப்பலி (ஆ) (புனித புரூணோ 3)<br>திருப்பலி (சீனமொழி)<br>மாலை 4.30 மணி தித்தி (சீ)<br>திருப்பலி (தேமொழி)<br>மாலை 6.00 கம் செபீர் (தே.மொ) | **மறைக்கல்வி வகுப்புகள் நடைபெறாது (பள்ளி விடுமுறை) 2019 ஆம் ஆண்டிற்கான பதிவுகள் ஜனவரி (தை) 6 ஆம் திகதி நடைபெறும்**<br>**முதியோர் கிறிஸ்துவ புகுமுக வகுப்பு** ( முகிபுவ )<br>காலை 9.00 - 10.30 ( தமிழ் ) காலை 11.00 - 12.30 ( தே. மொ )<br>காலை 11.00 - 12.30 ( ஆங்கிலம் ) காலை 8.45 - 10.15 (சீனம்) |

நம்முடைய மினவுதல் தேவாலயத்திற்கு வருகை தந்திருக்கும் **புதிய பங்கு மக்கள், கல்லூரி மாணவர்கள், சிரம்பான் வட்டாரத்தில் புதிதாக குடியேறியிருக்கும் சகோதர சகோதரிகள் அனைவரையும் வரவேற்கிறோம்.** உங்களுக்கு அன்னை மரியாளின் பாடல் அடங்கிய செப அட்டை வழங்கப்படும். உங்களின் பெயர்களைப் பங்கு அலுவலகத்தில் பதிந்து கொள்ளவும் அல்லது serembanvisitation@gmail.com மின்னஞ்சல் வழியாக தொடர்பு கொள்ளவும்.

### <u>2018 *டிசம்பர் (மார்கழி) மாத செய்திகள் / நிகழ்வுகள்*</u>

1) பங்கு காணிக்கை:
08/09 டிசம்பர் ரிம:9,680. 05
இறைவன் அனைத்து தாராள உள்ளங்களையும் நிறைவாய் ஆசீர்வதிப்பாராக!

**<u>2)திருவழிபாட்டுப் பொருட்கள் விற்பனை</u>**
அ) 2019 திருவழிபாட்டு நாட்காட்டி (ஆ) ரிம: 6.00
ஆ) 2019 திருவழிபாட்டு நாட்காட்டி (த) ரிம: 6.00
இ) 2019 திருவழிபாட்டு நாட்குறிப்பு (த/ஆ) ரிம:20.00

**3) <u>ஆலய சீரமைப்பு மற்றும் மேம்பாட்டுக்காக உங்களிடமிருந்து நிதியை வரவேற்கிறோம்.</u>** உங்களுடைய காசோலைகளை Church of Visitation பெயரில் எழுதவும். உங்களுடைய ஆதரவுக்கு நன்றி

**மரித்த ஆன்மாக்களுக்காக மன்றாடுவோம்.**
அ) போல் கனேஷ்வரன் (இறப்பு) 07-12-2018
ஆ) மோனிக்கா யாப் நியோ லுவான்(தித்தி) இறப்பு 6-12-2018
**முடிவில்லா ஒளி இவர்மேல் ஒளிர்வதாக!**

<u>2018 கிறிஸ்மஸ் மற்றும் 2019 புத்தாண்டு திருப்பலிகள்</u>
**<u>அ) கிறிஸ்மஸ் நள்ளிரவு திருப்பலி(24-12-2018) திங்கள்</u>**
மாலை 5.00 (ஆ)   7.00 மணி (தமிழ்)
இரவு 9.00 (சீனம்)   11.00 மணி(ஆங்கிலம்)
தித்தி (சீனம்) மாலை 4.30

**<u>ஆ) கிறிஸ்மஸ் தின திருப்பலி (25-12-2018) செவ்வாய்)</u>**
காலை 7.00 (தமிழ்)   காலை 9.00 (ஆங்கிலம்)
காலை 11.00(சீனம்)   பகல் 1.00 (தேமொழி)

**<u>இ) புத்தாண்டு நள்ளிரவு திருப்பலி(31-12-2018) திங்கள்</u>**
இரவு 8.00 (பல்மொழி திருப்பலி) தொடர்ந்து நள்ளிரவு வரை அமைதியில் செபம்

**<u>ஈ) புத்தாண்டு திருப்பலி (01-01-2019) செவ்வாய்</u>**
காலை 7.00 (தமிழ்)   காலை 9.00 (ஆங்கிலம்)
காலை 11.00 (சீனம்)   பகல் 1.00 (தே.மொழி)

**<u>உ) 26-28 டிசம்பர் வார நாட்களில் மாலை 7.00 மணிக்கு திருப்பலி நடைபெறும்</u>**

**<u>ஊ) பனாமாவில் நடைபெற இருக்கும் உலக இளைஞர் தின</u>** விழாவிற்கு (22-27 ஜனவரி 2019) நம் பங்கில் இருந்து செல்வி. எவ்லின் கலந்து கொள்கிறார்.அவருக்கு நம்முடைய ஆதரவை வழங்குவோம்.

**இன்று திருப்பலியை வழி நடத்திய** மார்ஜெரி **திரு இருதய** ஆண்டவர் சிற்றாலய அதிச **வினருக்கு நமது நன்றிகள்**

- **<u>குருத்துவ வாழ்வின் 50 ஆண்டு நிறைவைக் கொண்டாடும் அருட்தந்தையர்களுக்கு வாழ்த்துகள்</u>** இவர்கள் நல் சுகத்தோடு மகிழ்ச்சியில் வாழ்ந்திட செபிப்போம். (1)அருட்தந்தை மோன்சின்யோர் ஜேம்ஸ் ஞானப்பிரகாசம் - பினாங்கு குருத்துவ கல்லூரி (நம் பங்கின் மைந்தர்) (2) அருட்தந்தை நேடன் (சிம்பாங் பெர்த்தாங்) (3) அருட்தந்தை அமலநாதன் (ஏழைகளின் சிறிய சகோதரிகள் மடம், செராஸ்)

- **திருவருகைக்காலம்: வாக்குறுதியின் அடையாளமாக திருச்சபை மீண்டும் தொடங்குகிறது**
  - நம் இல்லங்களிலும், உள்ளங்களிலும், கிறிஸ்து பிறக்க தயார் செய்யும் தகுந்த காலம்
  - இவ்வுலகில்மகிழ்ச்சி, அமைதி,அன்பு, மற்றும் எதிர் நோக்கைக் கொண்டு வரும் காலம்.
  - மகிழ்ச்சியின் ஞாயிறு - அதிச சோன் அளவில் கிறிஸ்மஸ் பாடல்களை 15-12-2018 முதல் பாடிமகிழும் காலம்
  - கிறிஸ்மஸ் பாடல்கள் அனைத்து இல்லங்களிலும் பாடப்பட வேண்டும். பங்கு/அதிச வில் கலந்து கொள்பவர்களின் இல்லங்களுக்கு மட்டும் செல்லாமல், **தொலைந்து போன, கடைசியான, எளிமையான,** மற்றும் **சிறியோர்** ஆகியோரைத் தேடி அவர்களின் இல்லங்களுக்கும் சென்று பாடுங்கள். பங்கு அலுவலகத்தில் போலிஸ் அனுமதி கடிதத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.
  - **<u>ஏழைக்குடும்பங்களுக்கு உதவி:</u>** உணவுப் பொருட்களை வழங்கி அவர்களும் மகிழ்ச்சியடைய முன்வருவோம். (அரிசி, சீனி,மாவு மற்றும் எண்ணெய்) பங்கு அலுவலகத்தில் ஒப்படைக்கவும். நன்றி.

- **மினவுதல் தேவாலயப் பீடப்பணியாளர்களின் முகாம்: 60 சிறுவர்கள் இதில் பங்கெடுக்கின்றார்கள்** 17-19 டிசம்பர் 2018 (திங்கள் -புதன்)வரை நடைபெறும். இடம்: விசிடேஷன் செண்டர், ஜலான் லீசாம், இவர்களை நம் செபங்களில் ஒப்புக்கொடுப்போம்.

- **<u>ஒப்புரவு அருளடையாளம்</u>**: அண்மையில் நம் ஆலயத்தில் ஏற்பாடு செய்த ஒப்புரவு அருளடையாளத்தில் பங்கேற்காதோர் கிறிஸ்மஸ் தயாரிப்பாக விரைவில் பங்கெடுக்குமாறு கேட்டுக்கொள்கிறோம். அனைத்து திருப்பலிகளுக்கு முன்னதாக வழங்கப்படும்.
  22-12-2018 (சனி) காலை 9.00 - 12.00 மற்றும் மாலை 4.00 - 6.00 வரை
  23-12-2018 (ஞாயிறு) காலை 8.00 - 12.00 வரை
  24-12-2018 (திங்கள்) காலை 9.00 - 12.00 வரை
  **<u>சுங்கை காடோட் (இந்தோனேசிய கோங்சி)</u>** 16-12-2018 மாலை 5.00 -7.00 வரை
  **<u>கம்போங் செபீர்</u>** 23-12-2018 - மாலை 5.30 ஒப்புரவு மற்றும் திருப்பலி
  **<u>தித்தி</u>** 23-12-2018 மாலை 4.30 ஒப்புரவு மற்றும் திருப்பலி

- **புனித மேரி பாலர் பள்ளி - ஜலான் லீசாம்**(சீனோ ஆங்கிலப் பள்ளி வளாகத்தில்) பதிவு ஆரம்பமாகி விட்டது. தொடர்புக்கு:மரினா 019- 244 6143 - பள்ளி ஆசீர்வதிப்பு மற்றும் திறப்பு விழா - 16-12-2018 (ஞாயிறு) பகல் 3.00
- **<u>Love & Life 2019 (8/1/2019 - 12/1/2019) 18-24 வயதுள்ள இளைஞர்களுக்கான நிகழ்ச்சி</u>**
  இடம்: கோல்டன் சேண்ட் அசெம்பிளி, போர்ட்டிக்சன். கட்டணம் ரிம.200/-
  தொடர்பு: 03-2307660 / 018-590 3889
- **திருவருகைக்கால ஒப்புரவு அருளடையாளம் 2018**

17 டிசம்பர் (தி) : மாலை 7.30- அமல உற்பவ அன்னை ஆலயம், போர்ட்டிக்சன்
17 டிசம்பர் (தி) : மாலை 7.00-புனித லூர்து அன்னை ஆலயம், கிள்ளான்
18 டிசம்பர் (செ) : மாலை 6.45- புனித அந்தோனியார் ஆலயம், கோலாலம்பூர்
18 டிசம்பர் (செ) : மாலை 7.30 - கெமெஞ்சே
19 டிசம்பர் (பு) : மாலை 7.30-புனித தோமஸ் மூர், USJ
21 டிச்ம்பர் (வெ): மாலை 7.30- புனித பிரான்சிஸ் அசிசி, செராஸ்

UITM, ரெம்பாவ்வில் பயிலும் கிறிஸ்துவ மாணவர்கள் தங்குவதற்கு இடம் தேவை. உங்கள் இல்லத்தில் இடம் அளிக்க விரும்புவோர் பங்குத் தந்தை ஜோர்ஜ் அல்லது பங்கு அலுவலகத்தை அணுகவும்.